**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன் கீழ் பிரிவு 12 (1) (c) மற்றும் பிரிவு 13(1) ஐ மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்துதல் – சம்பந்தப்பட்ட ஆய்வு அலுவலர்களுக்கும் மற்றும் இயக்குநர்களுக்கும் அனுமதி வழங்குவது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித்(சி2)துறை**

அரசாணை(நிலை)எண்.9 — நாள்: 18.01.2011.
(திருவள்ளுவர் ஆண்டு 2042 தை 4)

படிக்கப்பட்டவை:

1. மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு துறை இயக்குநரின் கடித எண்.1–15/10–EE4, நாள் 23.11.2010
2. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கடித ந.க.எண்.9437/ஈ3/2010, நாள் 20.12.2010.

**ஆணை:–**

குழந்தைகளுக்கான தொடக்கக்கல்வியும் அடிப்படை உரிமைகளுள் ஒன்றாக கருதப்பட ஏதுவாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு தகுந்த திருத்தம் 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதனையொட்டி குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச்சட்டம் 2009, மைய அரசால் இயற்றப்பட்டு, இச்சட்டம் 01.04.2010 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. 6 முதல் 14 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தரமான இலவச தொடக்கக் கல்வி வழங்குவதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இச்சட்டத்தின் கீழ் மாநில அரசுகள் தகுந்த விதிகளை இயற்ற மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2. குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009இல் பிரிவு 13(1)–இல் எந்த ஒரு பள்ளியும் குழந்தையை சேர்க்கும்போது எந்த ஒரு பரிசீலனை நடைமுறைக்கும் உட்படுத்தக்கூடாது என்றும், மாணவர் சேர்க்கையின்போது பின்பற்ற வேண்டிய வழிமுறையை தெளிவாக கூறியுள்ளது என்றும், முதல் வகுப்பிலோ அல்லது ஒரு பள்ளி, பள்ளிக்கு முந்தைய கல்வியை (Kinder Garden) வழங்குமானால் அந்த வகுப்பில் சேரும் மொத்த குழந்தைகளில் குறைந்தது 25 விழுக்காடு குழந்தைகளை அருகாமை

த.பி.பா.

பகுதியிலுள்ள நலிந்த பிரிவுகள் மற்றும் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பிரிவுகளை சார்ந்தவர்களாக சேர்த்து அவர்களுக்குத் தொடக்கக் கல்வி முடியும் வரையில் இலவச கட்டாய தொடக்கக் கல்வி வழங்க வேண்டும் என்று பிரிவு 12 (1) (c)–இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. மேற்கண்ட இரண்டு பிரிவுகளில் குறிப்பிட்டவைகளைச் செயல்படுத்துவது தொடர்பாக புதுடெல்லி, மனிதவள மேம்பாட்டுத் துறை இயக்குநரிடமிருந்து கீழ்க்கண்ட வழிகாட்டுதல்கள் பெறப்பட்டுள்ளன.

அ. முதல் வகுப்பிலோ அல்லது ஒரு பள்ளி, பள்ளிக்கு முந்தைய கல்வியை (Kinder Garden) வழங்குமானால் அந்த வகுப்பில் சேரும் மொத்த மாணவர்களில் குறைந்தது 25 விழுக்காடு இடங்களை அருகாமை பகுதியிலுள்ள நலிந்த பிரிவுகள் மற்றும் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு வழங்குதல் வேண்டும். அவ்வாறு சேர்க்கும்போது அவர்களுக்கு தேர்வுகள் நடத்துவதோ (Test) அல்லது வாய்மொழி வினாக்கள் (Interview) கேட்பதோ கூடாது. விண்ணப்பங்களைப் பெற்று Random Selection முறையில் 25 விழுக்காடு மாணவர்களை தெரிவு செய்தல் வேண்டும்.

ஆ. எஞ்சியுள்ள 75 விழுக்காடு இடங்களைப் பூர்த்தி செய்யும்போது ஒவ்வொரு பள்ளியும் பள்ளி சேர்க்கைக்கான சரியான அடிப்படைக் கோட்பாடுகளுடன் (Rational) கூடிய வரையறுக்கப்பட்ட கொள்கையைப் (Policy) பின்பற்றுதல் வேண்டும். எந்த ஒரு சமயத்திலும் குழந்தையினுடைய இதர தகுதிகளையோ (Profiles), பெற்றோருடைய கல்வித் தகுதியையோ கருத்தில் கொள்ளக் கூடாது. சேர்க்கைக்கான கொள்கையை பொதுமக்களுக்கு சம்பந்தப்பட்ட பள்ளிகள் பள்ளிக் கையேடுகளில் (Prospectus) தெரியப்படுத்துதல் வேண்டும். மேற்கண்ட 25 விழுக்காடு சேர்க்கை மற்றும் 75 விழுக்காடு சேர்க்கை என்ற இரண்டு சேர்க்கையின்போதும் முதல் வகுப்பிலோ அல்லது ஒரு பள்ளி, பள்ளிக்கு முந்தைய கல்வியை (Kinder Garden) வழங்குமானால் அந்த வகுப்பில் சேரும் மாணவர்கள் சேர்க்கையின்போது அவர்களிடம் தேர்வுகள் நடத்துவது (Test) வாய்மொழியாக வினாக்கள் கேட்பது (Interview) போன்ற எந்த ஒரு பரிசீலனை நடைமுறைக்கும் மாணவர்களை உட்படுத்தக் கூடாது.

4. மனிதவள மேம்பாட்டுத் துறை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டுள்ள மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளை செயல்படுத்துவது தொடர்பாக பள்ளிகளுக்கு சுற்றறிக்கை வாயிலாக இதனை தெரியப்படுத்திடவும், பள்ளி நிர்வாகங்கள் இதனை கடைபிடிக்கின்றார்களா என்பதை உறுதி செய்யும் அதிகாரத்தை சம்பந்தப்பட்ட ஆய்வு அலுவலர்களுக்கும், இயக்குநர்களுக்கும் வழங்க அனுமதி வழங்குமாறு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

த.பி.பா.

5. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன் கீழ் பிரிவு 12 (1) (C) மற்றும் பிரிவு 13(1) தொடர்பாக மனிதவள மேம்பாட்டுத் துறை இயக்குநரிடமிருந்து மேலே பத்தி 3ல் பெறப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை செயல்படுத்துவது தொடர்பாக பள்ளிகளுக்கு சுற்றறிக்கை வாயிலாக தெரியப்படுத்திடவும், பள்ளி நிர்வாகங்கள் இதனை கடைபிடிக்கின்றார்களா என்பதை உறுதி செய்யும் அதிகாரத்தை சம்பந்தப்பட்ட ஆய்வு அலுவலர்களுக்கும் மற்றும் இயக்குநர்களுக்கும் வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தேவ. ஜோதி ஜெகராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்ககம்,
சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்,
சென்னை–6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர்,
சென்னை–6.
அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
நகல்:–
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
நிதி(கல்வி–11)துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.